முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.21.04.2026

O.S No. 204/2022

வா.சா.1- நாகேஸ்வரி

பிரதி தரப்பில் குறுக்கு விசாரணை.

தாவா சொத்தின் பரப்பளவு 1 ஏக்கர் 36 ½ சென்ட் ஆகும். அதில் விற்றது போக 85 சென்ட் கேட்டுள்ளேன். பழைய சர்வே எண்.4530 ஆகும். அதன் மொத்த பரப்பளவு 10 ஏக்கர் 95 சென்ட் என்றால் சரி. பழைய சர்வே எண்.4530 ன் புதிய சர்வே எண் என்ன என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1ன் படி பால்நாடாருக்கும் அனஞ்சபெருமாள்நாடாருக்கும் சர்வே எண்.4530 ன் இடம் கிடைத்தது என்றால் சரி. பால்நாடாருக்கு பி பட்டிகையில் 13 வது இலக்க சொத்தாக 1 ஏக்கர் 36 ½ சென்ட் கிடைத்தது என்றால் சரி. அனஞ்சபெருமாள்நாடாருக்கு எ பட்டிகையில் 14 வது இலக்க சொத்தாக 1 ஏக்கர் 36 ½ சென்ட் சொத்து கிடைத்தது என்றால் சரி. அனஞ்சபெருமாள்நாடாரின் இறப்பிற்கு பின்பாக அவரது மனைவியும் மக்களும் அவரது சொத்தை பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரி. வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன் அந்தஆவணத்தில் அனைத்து சொத்துக்களுக்கும் 4 எல்கைகள் கொடுக்கபட்டுள்ளது என்றாலும் மேற்படி 13,14 இலக்க சொத்துக்களுக்கு 4 எல்கைகள் கொடுக்கபடவில்லை என்றால் எனக்கு தெரியாது.

அந்த 1 ஏக்கர் 36 ½ சென்ட் என்பது பழைய சர்வே எண்.4035 ன் 10 ஏக்கர் 95 சென்டின் ஒரு பகுதி என்றால் சரி. 10 ஏக்கர் 95 சென்ட் இடத்தை 1955 க்கு பின்பு யாரும் பாகபிரிவினை செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. 10 ஏக்கர் 95 சென்ட் என்பது பிற ஆட்களுக்கும் உரிமை இருக்கிறது என்றால் சரி. 1 ஏக்கர் 36 ½ சென்ட்டில் 50 சென்ட் விற்றதாக சொல்லியிருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல்

செய்துள்ளேன். 10 ஏக்கர் 95 சென்ட்டில் எங்களுக்கு கொடுத்த 1 ஏக்கர் 36 ½ சென்ட் நிலம் எந்த இடத்தில் துலங்கும் என்று எந்த ஆவணத்திலும் குறிப்பிடவில்லை என்றால் தெரியாது. 1 ஏக்கர் 36 ½ சென்ட்டும் ஒரே கண்டமாக உள்ளதா என்றால் இல்லை 3 பிரிவாக உள்ளது.

அந்த 3 பிரிவு கண்டத்திற்கும் எல்கைகள் என்ன என்றால் வலியகண்டத்தில் 85 சென்ட் இடத்திற்கு கிழக்கு பக்கம் ஆரட்டுரோடும் மேற்கே ஐயப்பன் இடமும் வடக்கே சோமசுந்தரம்இடமும் தெற்கே பிரதியின் இடமும் உள்ளது. நடுபாகத்தில் 4 வது பாகத்தில் உள்ள 15 சென்ட் இடத்திற்கு கிழக்கே வலியகண்டமும் மேற்கே அப்பா விற்ற 35 சென்ட் இடமும் தெற்கு பக்கம் பிரதியின் இடமும் வடக்கு சோமசுந்தரம்இடமும் உள்ளது. அப்பா விற்ற 35 சென்ட் இடத்திற்கான 4 எல்கைக்கள் எனக்கு தெரியாது .

நான் மேற்சொன்ன எல்கைகளை வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரத்தில் குறிப்பிடபடவில்லை என்றால் சரி. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 3 தட்டாக இடம் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரி. அந்த 3 தட்டிற்கும் தனிதனியாக விஸ்தீரணம் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரி. உண்மையில் நான்சொல்வது போல் வா.சா.ஆ.1 ஆவணத்தில் அந்த 3 தட்டிற்கும் தனிதனியாக விஸ்தீரணம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எந்த ஆவணத்தின் அடிப்படையில் 4 எல்கைகளை நிர்ணயம் செய்து தரவேண்டும் என்று பிராதில் சொல்லவில்லை என்றால் சொத்தின் சர்வே வரைபடத்தை வைத்து கேட்டுள்ளேன். அந்த சர்வே வரைபடத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த வரைபடம் எந்த ஆவணத்துடன் இணைக்கபட்டுள்ளது என்றால் தெரியாது. பிராதில் பிராது ஆவணங்கள் அடிப்படையில் எல்கை நிர்ணயம் செய்ய நான் கேட்டுள்ளேன் என்றால் சரி.

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் எந்த ஆவணம் அடிப்படையில் எல்கை நிர்ணயம் செய்ய கேட்டுள்ளேன் என்றால் வா.சாஆ.1 பாகபத்திரம் ஆகும். அந்த வா.சா.ஆ.1 ஆவணத்தில் 10 ஏக்கர் 95 சென்ட் இடத்தின் எல்கைகள் தான் குறிப்பிடபட்டுள்ளது என்றாலும் நான் கேட்டுள்ள 85 சென்ட் இடத்தின் எல்கை குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல எல்கைகள் குறிபிடபட்டுள்ளது. புதிய சர்வே எண்.341/11 சி1 என்றால் சரியல்ல புதிய சர்வே எண்.341/11 சி மட்டும் தான். புதிய சர்வே எண்.341/11 சி என்பது 1,2 ஆக உட்பிரிவு செய்யபட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

எங்கள் சொத்தின் தெற்குபக்கம் அனஞ்சபெருமாள்நாடாரின் வாரிசுகளின் சொத்துக்கள் உள்ளது என்றால் சரி. பிரதியிடம் அவருக்குரிய 1 ஏக்கர் 36 ½ சென்ட்டில் விற்றுபோக மீதி இடம் உள்ளது என்றால் சரி. தற்போது அவரிடம் 35 சென்ட் இடம் உள்ளது. அந்த 35 சென்ட்டை அளவீடு செய்து பார்த்தேனா என்றால் இல்லை. பிரதியின் பெயரில் 63 சென்ட் இடத்தை அவரது சித்தப்பா பால்துரை கிரயஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. அதுபோல் மகேஷ் என்பவருக்கு 23 சென்ட் இடத்தை சித்தப்பா பால்துலை கிரயம் கொடுத்துள்ளார் என்றால் கேள்விபட்டேன் எனக்கு நேரடியாக தெரியாது. பிரதியின் மைத்துனர் மகேஷ் என்றால் சரி. அவர்கள் இருவருக்கும் சேர்த்து 86 சென்ட் இடம் உள்ளது என்றால் கேள்வி பட்டேன் எனக்கு நேரடியாக தெரியாது. வா.சா.ஆ.4 பட்டாவில் 19 பேர்களுக்கு கூட்டுபட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரி. தாவா சர்வே எண்ணில் மேற்படி 19 பேர்களுக்கும் உரிமை உள்ளது என்றால் சரி. அந்த 19 நபர்களையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி. பிரதியின் இடம் தொடர்பாக எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரி. அவர்கள் இடம் தனி என் இடம் தனி.

வா.சா.ஆ.1 பத்திரத்தில் பிரதியின் தாத்தாவிற்கு 4 தட்டு சொத்துக்கள் எழுதி

கொடுக்கபட்டது என்றால் சரி. வா.சா.ஆ.3 ஆவணம் அப்பாவின் சகோதரி அப்பாவிற்கு எழுதி கொடுத்த ஆவணம் என்றால் சரி. என் அப்பாவுடன் 3 நபர்கள் உடன் பிறந்தவர்கள். பால்நாடாரின் வாரிசு சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் அப்பாவின் சகோதரி பாமா வா.சா.ஆ.3 ஆவணத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரி. அவர் திருமணம் முடிந்த உடன் இறந்து விட்டார். அவர் வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் பேச்சுவார்த்தை இல்லை. அவர்களுக்கு குழந்தைகள் உண்டா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது. பால்நாடாரின் வாரிசு சான்றிதழ் பெற்றால் பாமாவின் வாரிசுகளின் விவரம் தெரியவரும் என்றால் சரி.

வா.சா.ஆ.3 சீர்திருத்த பத்திரத்தில் உள்ள எல்கைகள் வா.சா.ஆ.1 பாகபத்திரத்தில் குறிப்பிட்ட எல்கைகளுக்கு மாறுபட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என் அப்பா பெயரில் ஏற்படுத்தபட்ட போலியான ஆவணங்கள் என்றாலும் வழக்கிற்காக ஏற்படுத்த பட்டது என்றாலும் சரியல்ல. பால்நாடாரின் அனைத்து வாரிசுகளையும் கட்சி சேர்க்காததால் இந்த வழக்கில் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரி. ஆணையர் அளவீடு செய்தபோது நாங்களும் உடன் இருந்தோம். அந்த விவரங்களை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. ஆணையருக்கு சொத்தின் விவரங்களை நாங்கள் அடையாளம் காட்டினோம். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள எல்கைகள் படி தாவா சொத்தை அளவீடு செய்ய சொன்னோம். ஆணையர் எங்களுடைய சொத்தையும் பிரதியின் சொத்தையும் அளந்தார்கள். கிரயம் கொடுத்ததுபோது மீதி கைவசம் உள்ள வாதி மற்றும் பிரதியின் சொத்தை அளவீடு செய்தார்

என்றால் சரி. தாலுக் சர்வேயர் உடன் இருந்தார்.

வாதி மற்றும் பிரதியின் இடம் சேர்த்து மொத்தமே 63 சென்ட் இடம் தான் பூமியில் இருப்பதாக ஆணையரும் சர்வேயரும் கூறியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. எங்களுக்கு மட்டும் 63 சென்ட் இருப்பதாக கூறியுள்ளார்கள். ஆணையர் வரைபடத்தில் வாதி மற்றும் பிரதியின் இடமாக 63 சென்ட் இடம் மட்டுமே காட்டபட்டுள்ளது என்றால் சரி. ஆணையர் வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லியுள்ள 1 0 ஏக்கர் 95 சென்ட் சொத்தை அடையாளபடுத்த முடியவில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் சரி. நான் சொல்லும் 85 சென்ட் சொத்தின் எல்கைகளை ஆணையர் வரைபடம் மற்றும் அறிக்கையில் காண்பிக்கவில்லை என்றால் தெரியாது. சொத்தை அடையாளம் காண்பித்து அளவீடு செய்து வரைபடம் தயாரித்து கொடுத்தால் மட்டுமே அதன் அடிப்படையில் எல்கை நிர்ணயம் செய்ய முடியும் என்றால் சரி.

341/9 , 341/4 சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றால் சரி. தாவா சொத்தில் எங்களுக்கு 10 சென்ட் இடம் மட்டுமே உரிமை பட்டது என்றால் சரியல்ல. எங்கள் சொத்தின் அருகே புறம்போக்கு நிலம் உள்ளது என்றால் சரி. பிரதி எங்கள் சொத்தில் அத்துமீறி நுழைந்ததாக சொல்லியதற்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் விசாரணை செய்யவில்லை என்றால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய சொன்னார்கள். உண்மையில் சம்பவம் நடைபெறாததால் நான் கொடுத்த புகாரில் நடிவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக நான் சொல்லிய முன்வழக்குகளில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கபட்டாரா என்றால் தெரியாது. வா.சா.ஆ.11 ல் அ.வ.எண்.40/16 தீர்ப்பாணையில் வழக்கானது தவறுகைக்காக தள்ளுபடி செய்யபட்டுள்ளது என்றால் தள்ளுபடி செய்யபட்ட விவரம் தெரியும் எதற்காக என்ற விவரம் தெரியாது. நான் சொல்லியுள்ள முன் வழக்குகளில் தாவா சொத்து சம்பந்தமாக எந்த முடிவும்

எட்டபடவில்லை என்றால் தெரியாது. வா.சா.ஆ.14 வரைபடம் யார் தயார் செய்தது என்றால் தெரியாது. அந்த வரைபடத்தில் அளவுகள் எதுவும் போடபடவில்லை என்றால் சரி. அந்த தோராய வரைபடத்தின் படி பூமியில் சொத்துக்கள் அமையவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி 1 ஏக்கம் 36 ½ சென்ட் இடம் கைவசம் கிடைக்காததால் பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யபட்டுள்ளது என்றாலும் இந்த வழக்கில் கேட்ட பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல.